சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தின் யாப்பு சீரமைப்பு குழு உருவாக்கப்பட்டு கிடைத்த சிபார்சுகளின் அடிப்படையில் இரண்டு கூட்டங்கள் கூட்டப்பட்டு இறுதியாக 04.05.2024 இடம்பெற்ற கூட்டத்தில் இறுதிசெய்யப்பட்ட பரிந்துரைகள் 17.08.2024 நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டது.

யாப்பு சீரமைப்பு குழு: த.தவரூபன் , லோ.துசிகரன் , சு.சத்தியேந்திரன் , Dr.ப..நந்தகுமார். சி.குமாரலிங்கம்

திருத்தங்கள் , சேர்க்கைகள் வருமாறு.

(5.10) உறுப்புரிமை விண்ணப்பம் பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும் அது உறுப்புரிமை ஆய்வுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் உறுப்புரிமை ஆய்வுக்குழு மீளாய்வின் பின் தலைவர் செயலாளர் ஒப்புதல் பெற்று உறுப்புரிமை இறுதி செய்யப்படும் எடுத்து மூல உறுப்புரிமை ஆட்சேபனைகளுக்கான காத்திருப்பு காலம் ஒரு மாதமாகும்.

(6.6)கூட்டத் தீர்மானங்கள் 21 உறுப்பினர்கள் கொண்ட பொதுக்கூட்டமொன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னரே இறுதியாக்க முடியும்.

(6.9) வெளியக கணக்காய்வாளர் ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்

(6.11) அலுவலர்கள் - 6 , திட்டப்பணிப்பாளர் – 6 (இல்லம், கல்வி, மருத்துவம் , சமயம், கலை கலாச்சாரம் & விளையாட்டு , பயிற்சி & தொழில்நுட்பம் , விவசாயம்), சாதாரண பணிப்பாளர் - 7

திட்டப்பணிப்பாளர்கள் தங்கள் துறையின் கீழ் வரையறுக்கப்பட்ட விடயங்களின் அனைத்து விடயங்களையும் கண்காணிக்கவும் அசையும் அசையாச்சொத்துக்கள் தொடர்பிலான ஆவணங்னை அணுகுதல் சரிபார்த்தல் நிர்வாக செயற்பாட்டு பணிகளை பணிப்பாளர் சபையின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு அனுமதிக்கபட்டிருப்பர்.

(6.17)தலைவர் செயலர் நிதிச்செயலர் பதவிநிலைகளுக்கு தெரிவு செய்யப்படுபவர் தொடர்ச்சியாக ஏதாவது ஒரு பணிப்பாளர் சபையில் பதவியேற்றதில் இருந்து அச்செயற்குழுவில், தவிர்க்கமுடியாத காரணங்கள் எதுவுமற்ற நிலையில் ”முழுமையாக” பணியாற்றியிருக்க வேண்டும்.

(6.18) நிர்வாக நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் பதவிநிலை பணிப்பாளர் சபை உறுப்பினர் எவரும் பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி பதவி துறந்தால் அடுத்துவரும் பணிப்பாளர் சபையில் இடம்பெற முடியாது.

(6.19) போசகர் குழு – 3 சைவத்தியாவிருத்திச்சங்கத்தின் நோக்கம் இலக்கு ஆகியவற்றை காப்பாற்றிசெல்லக்கூடியதான வகையில் உறுப்பினர்கள் பொதுச்சபையால்

தெரிவுசெய்யப்படுவர். அவர்கள் இயக்குனர் சபைக்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் உதவியாக ஆலோசனைகளை வழங்குவர். இக்குழு பணிப்பாளர்சபைக்கு வெளியில் இருந்து செயற்படும் ஒரு ஆலோசகர் சபையாகும். இக்குழுவில் இடம் பெறுவதற்கான அதிகுறைந்த வயதெல்லை 60 ஆகும்

(7.9)தலைவர் செயலாளர் நிதிச்செயலாளர் திட்டப்பணிப்பாளர் பதவிகளுக்கு ஒருவர் இரு பதவிக்காலம் தொடர்ச்சியாக பகுதியாகவோ முழுமையாகவோ பணியாற்றியபின் அடுத்துவரும் 3 வது பதவிக்காலத்திற்கு எந்தக்காரணத்தின் அடிப்படையிலும் எந்த தருணத்திலும் குறித்த பதவிக்கு தெரிவுசெய்யப்படமுடியாது. . சாதாரண பணிப்பாளர்களுக்கு இது பொருந்தாது.இடைக்காலத்தில் பதவி நிரப்புவதற்கு இணைக்கப்படுபவர்களுக்கும் இந்த சரத்து பொருந்தாது.

(7.12) ஒரு வருடத்தில் 50 வீதத்திற்கு குறைவாக வரவு உள்ளவர்கள் ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் நீக்கப்பட்டு புதிய பணிப்பாளர்கள் உள்வாங்கப்படுவர். ஒரு பணிப்பாளர் சபையின் பதவிக்காலத்தில் பதவியேற்றதில் இருந்து நடைபெற்ற கூட்டங்களில்(பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட விடுப்புக்கள் நீங்கலாக) 50 வீத வரவுக்கு குறைவாக உள்ளவர்கள் அடுத்த பணிப்பாளர் சபையில் இடம் பெற முடியாது.

(7.13) உபகுழுக்கள் பொதுக்கூட்டத்தில் அல்லது பணிப்பாளர் சயில் தேவைக்கேற்ப உருவாக்கப்படும் உபகுழுவில் உறுப்பினர்களாக பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவரேனும் இடம்பெறவேண்டும் பணிப்பாளர்சபையின் நிர்வாக முடிவில் அக்குழுக்கள் கலையும். உபகுழு வெற்றிடங்களை பணிப்பாளர் சபை அவ்வப்போது நிரப்ப முடியும்

(8.7) ஆளுநர் சபை நீக்கப்பட்டு பதிலீடாக நடவடிக்கைக்குழு செயற்படும். இதில் தலைவர் செயலர் நிதிச்செயலர் மற்றும் 6 திட்ட பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர் அதில் உள்ள வெற்றிடங்கள் பணிப்பாளர் சபையால் நிரப்பப்படும். இது பணிப்பாளர் சபைக்குக்கட்டுப்பட்டது. அவசிய அலுவல்களை கவனிக்க குறுகியகால முன்னறிவித்தலில் கூடி முடிவுகளை எடுக்கும். முடிவுகளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகராம் பெறப்படும்.திட்டப்பணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அந்த திட்ட பணிப்பாளர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்படுவர்

(13.3) யாப்பு சீர்திருத்தங்கள் யாப்பு சீர்திருத்தக்குழு அமைத்து அதன் ஊடாக பரிந்துரைகள் பெறப்பட்டு இறுதி செய்து பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(14) ஒழுக்காற்று நடவடிக்கை-

(14.01)பணிப்பாளர்கள் உறுப்பினர்கள் மீது சங்கத்தின் நலனுக்கும் நோக்கத்திற்கும் எதிராக தொழிற்படும் இடத்தில் விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களது உறுப்புரிமை அல்லது அவர்களது பதவியை இடைநிறுத்திவைக்கும் உரிமை பணிப்பாளர் சபைக்கு உண்டு.

(14.02)பணிப்பாளர் சபையில் இருந்து ஒருவரை அவர்களது நடவடிக்கைகளின் மீதான அதிருப்தி அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகக்காக இரகசிய அல்லது திறந்த வாக்கெடுப்பில் பணிப்பாளர்சபையின் பெரும்பான்மை வாக்குகளுடன் இடை நிறுத்தவோ தற்காலிக இடைநிறுத்தத்தை இரத்து செய்யவோ முடியும்.

(14.03)இடைநிறுத்தங்கனை நிரந்தரமாக்கல் குறித்த இறுதிமுடிவை பொதுச்சபையே எடுக்கும்.

(14.04) விசாரணைக்குழுவானது 4 பொதுச்சபை உறுப்பினர்களையும் 1 போசகரையும் கொண்டு அமைக்கப்படும்.

15) இல்ல முகாமைத்துவ குழுக்கள்

(15.01) சபையின் பராமரிப்பில் உள்ள இல்லங்களுக்கு இல்ல முகாமைத்துவக்குழு பணிப்பாளர் சயினால் நியமிக்கப்படும் . அக்குழுக்கள் பணிப்பாளர் சபையின் வழிகாட்டலில் இல்லங்களை வழிநடாத்தும் .

(15.02) இல்லங்களை முகாமை செய்வது பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக்கூறல் ஆகிய பணிகளை இல்ல முகாமைத்துவக்குழுக்களின் பணியாக இருக்கும். இல்ல முகாமைமைத்துவக்குழுக்கள் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கமைய கட்டமைந்திருக்கும்.

16) நிர்வாக ஆளணியினர்

நிர்வாக ஆளணியினர் பணிப்பாளர் சபையினால் விண்ணப்பம் கோரப்பட்டு நிரப்பப்படும். அவர்களுக்கான பணிகனை வரையறுத்தல் மற்றும் வேதனங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபை அவ்வப்போது கொள்கைகளை உருவாக்கும். நியமனங்கள் யாவும் பணிப்பாளர் சபையின்அங்கீகாரத்திற்குட்பட்டவை. நியமனங்களை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் செயலாளர் மேற்கொள்ள முடியும்

• நிர்வாக அலுவலர் -1 • கணக்காளர் -1 • இல்லங்களுக்கான முகாமைத்துவ உதவியாளர் (நிதி 3 ,நிர்வாகம் 3) • அலுவலக நிதி உதவியாளர் -1 • சிற்றூழியார்கள் - தேவைக்கேற்ப • அலுவலக உதவியாளர் 1 • சமையலாளர் (தேவைக்கேற்ப) • துப்பரவுப்பணியாளர் (தேவைக்கேற்ப)	• பண்ணைப்பராமரிப்பாளர் -1 • இல்ல முகாமையாளர் (ஒவ்வொரு இல்லத்துக்கும் 1) • உதவி விடுதிக் காப்பாளர்கள் (தேவைக்கேற்ப) • பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (தேவைக்கேற்ப) • தொழில்நுட்ப உத்தியோகத்தர் -1 • கொள்வனவு அலுவலர் -1